குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.182/2013

அ.சா.2

2024—ம் ஆண்டு அக்டோபர் 24—ம் தேதி வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி 02—வது நபரின் வாக்குமூலம் (1969—ம் ஆண்டின் 54—வது விதியின் 9—வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவிந்தன் | ஜாதி | |
| தந்தை பெயர் | கரிமலை | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.02 மணி,

Accused A2.Subramani Present. A1.Ramasami died and charge abated. Advocate Mr.K.Sivakumar present for accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

**1.** நான் பாரக்கல்லூரில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1—ஐ தெரியும். சுமார் 11 வருடங்களுக்கு முன்பு, வெங்கடேஷ் என்பவர் அவருக்கு சொந்தமான லாரியை எங்கள் ஊரில் உள்ள சமயபுரத்து மாரியம்மன் கோவில் அருகே நிறுத்தியிருந்தார். நான், ஊருக்கு சென்றுவிட்டு மறுநாள் விடிந்த பின்பு, ஊருக்கு வந்து பார்த்தபோது, மாரியம்மன் கோயில் அருகே கூட்டமாக இருந்தார்கள். அங்கு வெங்கடேஷ் நிறுத்தியிருந்த லாரியை காணவில்லை என்று அவர் புகார் அளித்ததாகவும், அதுசம்மந்தமாக போலிசார் வந்து விசாரித்ததாகவும் சொன்னார்கள். போலிசார் விசாரித்தார்கள்.

**( அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

2. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 15.06.2013 ஆம் தேதி இரவு சுமார் 12.00 மணிக்கு நான் வீட்டிலிருந்தபோது, அ.சா.1 எங்கள் ஊர் சமயபுரம் மாரியம்மன் கோயில் அருகே நிறுத்தியிருந்த அவருக்கு

சொந்தமான டி.என்.30 இ 9419 என்ற பதிவெண் கொண்ட லாரியை எதிரிகள் அருகில் நின்று கொண்டு பார்த்துக்கொண்டிருந்தார்கள் என்றும், பின்பு அந்த லாரியை அங்கிருந்து எடுத்துச்சென்றார்கள் என்றும், நான் லாரியை வாடகைக்கு எடுத்துச்செல்கிறார்கள் என்று அமைதியாக இருந்துவிட்டேன் என்றும், அதன்பின்பு தான் மேற்படி எதிரிகள் லாரியை திருடிச்சென்றார்கள் என்றும் தெரியவந்தது என்று கூறிவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.**

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 01.10 மணி,

ஒம்/–ச.ஷர்மிளா.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.